(2023-24-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE **23 UTL 202**

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2023**

**இளநிலை பட்ட வகுப்புகள்** **மதிப்பெண்கள்: 75**

**(அரசு உதவி மற்றும் சுயநிதி )**

**இரண்டாம் பருவம்** **நேரம் : 3 மணி**

# பகுதி – 1

# தமிழ்த்தாள் - 2

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. திராவிட சிசு என்று அழைக்கப்படுவர் ..................

   அ) திருஞானசம்பந்தர் ஆ) அப்பர் இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்

2. கவிதைச் சூரியன் ஆசிரியர் ........................

   அ) சிற்பி ஆ) நஞ்சையன் இ) பிரகாஷ் ஈ) சித்ரகலா

3. வள்ளலார் பிறந்த ஊர்....................

   அ) கடலூர் ஆ) சிதம்பரம் இ) மருதூர் ஈ) வடலூர்

4. சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்?

   அ) 66 ஆ) 76 இ) 86 ஈ) 96

5. கம்பர் இறந்த ஊர் .....................

   அ) திருவெழுந்தூர் ஆ) நாட்டரசன் கோட்டை இ) தஞ்சாவூர் ஈ) மானாமதுரை

**கீழ்க்காணும் வினாக்களுக்குப் புரிதல் திறன் (K2-Understanding) அடிப்படையில் ஓரிருசொற்களில் /வரிகளில் விடையளிக்கவும்.**

6. கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?
7. ‘சுடுசோறு” - மூன்று காலங்களையும் எழுதுக.
8. நிலத்துக்கு அணியென்பன யாவை?
9. சுற்றுச்சூழல் என்பதன் ஆங்கிலச் சொல்லாக்கம் எது?
10. உரைநடை ஆசிரியர்கள் இருவர் பெயரினைக் குறிப்பிடுக.

(த.பி..பா)

ETHICAL PAPER

**பகுதி – ஆ ( 5 x 5 = 25 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வினாக்களுக்குப் பயன்பாட்டுத்திறன் அடிப்படையில் (K3-Apply) இருபக்க அளவில் விடையளிக்கவும். (K3)**

11. அ) திருவெழுக் கூற்றிருக்கை பிரபந்தத்தில் கூறப்படும் திருமாலின் பெருமைகளை எழுதுக. **(அல்லது)**

ஆ) இயேசுகாவியம் கூறும் மழைப் பொலிவு நிகழ்வினைச் சுருக்கமாகக் கூறுக.

12. அ) சித்தர்பாடல்களில் காணப்படும் வாழ்வியல் சிந்தனைகள் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) இதழ்களில் உலகளாவிய சிந்தனைகள் இருக்குமா? விளக்குக.

13. அ) "அலையாழி சூழ்திருச் செந்தில் வடிவேலுனுடன் அம்புல் ஆடவாவே" இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**(அல்லது)**

ஆ) "தேரோடும் தங்கள் சீரான மதுரையிலே ஊராக்கள் கொண்டாடும் ஒயிலாட்டம்" இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

14. அ) தொகாநிலைத் தொடரின் வகைகளைச் சான்றுடன் எழுதுக.

**(அல்லது)**

ஆ) தொகைநிலைத் தொடரின் வகைகளைச் சான்றுடன் எழுதுக.

15. அ) பன்னிரு திருமுறைகள் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) கடித இலக்கியம் என்றால் என்ன? தமிழ் இலக்கியங்களில் காணப்படும் கடித இலக்கியங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

**பகுதி - இ ( 5 x 8 = 40 மதிப்பெண்கள்)**

**வினாக்கள் ஆய்தல் திறன் (K4/K5-Analysis) அடிப்படையில் அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.**

16. அ) கோளறு பதிகத்தில் இறைவனின் சிறப்புகளாக திரு.ஞானசம்பந்தர் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) கம்பர் பாடிய சரஸ்வதி அந்தாதி பாடல்களில் பொதிந்துள்ள கருத்துகளைச் சுருங்கச் சொல்லுக.

17. அ) காலந்தோறும் மகளிர் முன்னேற்றம் எவ்வாறு இருந்தன? அதனால் ஏற்பட்ட சாதனைகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) "இதோபதேசம்"- என்பதில் திருமூலர் கூறும் தத்துவங்கள் குறித்து விளக்குக

18. அ) வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக.

**(அல்லது)**

ஆ) திருக்குரானும் அறநூல்களும் பற்றிமுனைவர் அ. மகப்பூ வழியில் நின்று எடுத்துரைக்க.

19. அ) தமிழில் சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கட்டுரை வரைக.

**(அல்லது)**

ஆ) சுற்றுச் சூழல் என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வரைக.

20. அ) "நேரம்" என்ற தலைப்பில் மாணவர்களுக்கு கூறும் செய்திகள் யாவை? விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'எழுத்தர்" வேலை வேண்டி விண்ணப்பம் ஒன்று வரைக.

****************

ETHICAL PAPER